அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 8 நெறி 3 தமிழ் மாத இதழ் விலை ₹1 அக்டோபர் 2017



பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!

## மலர்ந்து நல் வண்ணம் வயங்கிய மலரே

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!



## வாழ்த்தி வணங்குகிறோம்

பள்ளிச் செல்லா பாலகனாய், வள்ளாருக்காக தன்னையே அர்ப்பணித்து வாழும் தொண்டர் தீபம் அறக்கட்டளையின் மதுராந்தகம் தருமச்சாலையின் பொறுப்பாளர் தயவு **கார்த்தி** குடும்பத்தினரை வாழ்த்தி வணங்குகின்றோம்.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலையில் நாள்தோறும் சமையலுக்கு தேவையான காய்கறி வகைகளை கிராமிய பாரம்பரிய முறையில் நறுக்கப்பட்டு தயாராக இருக்கும் அற்புதக்காட்சி.


## “ தீபநெறி ” ஆசிரியர் குழு



**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**இர. கங்கை மணிமாறன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கங்காதரபுரம், மயிலாடுதுறை.
கைபேசி : 94434 08824



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 89393 76652

# LIGHT IS THE ORIGIN

அண்டப் பரப்பின் திறங்கள்
அனைத்தும் அறிய வேண்டியே
ஆசைப்பட்டது அறிந்து தெரித்தாய்
அறிவைத் தூண்டியே (4994)

"The capabilities of geo surface are from where and how" was my anxiety to learn, which you know and catalysed to improve my knowledge through which you made me to learn it.

பூதாதிகளைப் பொருத்தும் பகுதி
பொருத்தம் முற்றுமே
பொய்மை நீக்கி காணக் காட்டி
தெரித்தாய் மற்றுமே (4995)

The rings (space, air, fire, water, earth) root, formation, interaction, association, dissociation, conversion, transformation were all shown to me fully and I possess all details about them.

அண்டகோடி அனைத்தும் காணும்
கண்கள் எய்தியே
அறிந்தேன் அங்கைக் கனிபோல்
அவற்றில் உள்ள செய்தியே (5056)

The entire universe could be visually seen by my eyes and the "in and out" of them if just like a fruit in my palm. Like any other human being saint Ramalingam (Vallalar) born in 1823A.D. in the southern part of Indian sub continent. He had no observatory, research centre, geology or astronomy teacher for improving his knowledge about the above subject. But his poems reveals fantastic information and data which no one can think even for next several centuries. Like a drop from ocean, just a capsule is here for our knowing the contents of Vallalar's THIRURUTPA.

வானே அவ்வானுலவும் காற்றே காற்றில்
வரு நெருப்பே நெருப்புறு நீர் வடிவே
நீரில் தானேயும் புவியே அப்புவியில் தங்கும்
தாவரமே சங்கமமே (மகாதேவமாலை - 25)

Certainly it was the space (first) (in that space the air started spinning! into that air the fire entered (from out side) from that fire water was figuring. From that water earth surfaced. In that earth weed, grass, plants, trees, etc, came! There after birds, animals, human being (which was through male-female contacts) etc., come........and so on (poem 25) The earth on which we live does not give any authentic clue about its formation scientifically. There was nobody to record from day one of the earth's creation to know which was first and which was next. When it is so, what relevance the above poem 25 of Vallalar's Mahadevamalai can convince us in accepting the concepts of geo formation? Because it is from a saint it should be true and our job is not to discuss but to accept it? Vallalar's poem 4994, 4995, 5056 Arutpa says that he himself was anxious to know about the creation of earth and the sequences from the root. He learnt it only by improving his knowledge. Again the question comes about the authenticity.

A decade ago a comet namely "Shoe maker levy" was sighted by astronomers through the observatory and it was to crash in planet called Jupiter and that revealed what? In the space, Jupitas was spinning. Jupiter till that day/ was having just Nitrogen (inert gas) and Hydrogen (active gas) but nothing else. The comet "Shoemaker Levy" Which was glowing brightly because of fire in it fastly entered in the gaseous planet Jupiter and broken into several pieces. That incident was over! Think now! space was there! Gases were spinning (and we named it as Jupiter - a planet) The fire came into from outside ( a comet named as shoemaker levy) what we saw in Vallalar's poem-25 is true with regard to three rings and their sequences! The process towards creating life in a planet is partially over.

Now because of Hydrogen's existence in Jupiter already and the new entrant oxygen

பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரந்தெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (566)

(which has to be there as the reasons for any buring substance) through the comet. It not today at least after several years water ($H_2O$) has to get formed there and there is no escape. So it paved way for stage four on that day of crash. May be after a million year the solid mass like earth and life in that planet is possible! This is what the poem-25 indicates and it is absolutely clear which is just compered as a fruit in the palm of Vallalar in poem 5056.

If some of the readers are more interested many evidences can be shown which respect to Vallalar's poems and its relevance to science today. The minerals, metals, non metals found in the earth will be mostly in the form of compounds like Nitrates, Oxides, Hydrides etc., which is giving a clue that the earth also could have been formed through the same line as that of Jupiter's position today.

The comets and asteroids (Small planets) in quite good number should have crashed into the earth at least 250 million years ago (they call it as 250 ma) Every asteroid or planet could have also brought some metals, elements and crashed into the earth is the reason for the availability of metal and mineral deposits. Somewhere in splinters and that is the reason a few metals are found in many parts of the earth including a few under the oceans. For example gold deposits are found in few continents only. Some high density metal cannot form compounds like Oxides or Nitrates and they are as it is.

Recently scientists found good Quantum of Iridium deposits are found in Italy (Gubbio) India (Meghalaya) and its contents are similar to that of a asteroid which crashed recently (in 1980) as per the Nobel Lauret Luis W. Alvarez.

We live on this earth and we are using aluminum, Steel, Cooper, Silver, Gold, Irudiam, Platinum and so on. Where from they came to the earth? It came from outside. In what form it came? In the form of fire it came. But for the fire (light) which come from outside, water, plants, animals, human being would not have come up. Even the Vegetables and fruits what we eat to live has to get carbohydrates, copper, iron etc, so the entire mechanism of cycle stated only from one thing that is THE FIRE WHICH CAME IN காற்றில் வரும் நெருப்பே perhaps that is the reason why Vallalar is concluding that Assuming the God is there in the standing lamp (which is he kept outside Sidhi Valagam and asked us to worship it. May be day, the world has to accept that fire (reason for light) which has come from outside is alone fit for our thanks giving and worshiping. This is not a conclusion but a worth thinking subject, till it is declared everything is from light and Light is The Origin.

**K.N. உமாபதி**
**K.K. நகர் – 95518 49757**

---

**சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை**

கடந்த 10 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு ஜோதி தரிசன நாளில் வருகை தந்து, மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கிறோம்!

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**09.11.2017 (வியாழக்கிழமை)**
**இரவு 8.00 மணிக்கு**

**நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,
வேளச்சேரி, சென்னை – 600 042

**பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்**
**அராவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (568)**

# பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ...!



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில்
நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாய் பல நூற்றுக்கணக்கான மக்கள் பசியாறும்
ஆனந்தமயமான அற்புதக்காட்சி.



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் தலை வாழையிலையில்
அறுசுவை பதார்த்தங்களுடன் அமுதுண்ணும் வறியவர்களின் ஒரு பகுதியினர்.

**பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியில்**
**அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (570)**

# கடவுளுக்கும் நமக்கும் என்ன மறைப்பு?

கடவுள் இயற்கை உண்மையான அருள் ஒளியாக உள்ளார். கடவுளுக்கு உடம்பு கிடையாது. மறைப்பு கிடையாது. இயற்கை விளக்கமாக உள்ளார். எல்லா உயிர்களுக்கும் அன்பும், தயவும், கருணையும் வழங்கிக் கொண்டே உள்ளார்.

அடுத்து என்றும் அழியாத மாறாத, மறையாத இயற்கையான இன்பத்தை தந்து கொண்டே உள்ளார்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தன்மைப் பற்றி வள்ளலார் பதிவு செய்துள்ள பாடல்!

இயற்கையிலே பாசங்கள் ஒன்றும் இலார், குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்கள் ஏதுமிலார், மற்றோர்
செயற்கை இல்லார், பிறப்பில்லார், இறப்பில்லார், யாதும்
திரிபில்லார், களங்கம் இல்லார், தீமை ஒன்றும் இல்லார்,
வியப்புற வேண்டுதல் இல்லார், வேண்டாமை இல்லார்,
மெய்யே மெய் ஆகி எங்கும் விளங்கி இன்பமயமாய்
உய்த்தரும் ஓர் சுத்தசிவானந்த சபைதனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர்!

மேலே உள்ள பாடலில் கண்டபடி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உள்ளார்.

மனித தேகம் எடுத்த நாமும் அதே நிலைக்கு மாற வேண்டும். அப்படி மாற்றம் அடைவதற்கு பெயர் தான் - கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்று வள்ளலார் பெயர் வைத்து உள்ளார்.

அதே "அருட்பெருஞ்ஜோதி" ஜோதிதான் இயற்கை உண்மையாக நம் சிரநடு சிம்மாதனத்தில் ஞான சிங்காதன பீடத்தில் அமர்ந்து உயிரையும் உடம்பையும் இயக்குவதற்கு ஒளி வழங்கிக் கொண்டு உள்ளார். ஜீவனை இயக்கிக் கொண்டு இருப்பதால் அதற்கு "ஜீவ ஆத்மா" என்று பெயர்.

இறைவனை காண்பதற்கும் இறை அருளைப் பெறுவதற்கும் தடையாக இருப்பது உடம்பும், உயிரும் தான் என்பதை வள்ளலார் தெளிவாக விளக்கி உள்ளார். அதற்குப் பெயர்தான் ஆணவம், மாயை, கன்மம் என்பதாகும். ஆன்மாவைப் பற்றிக் கொண்டு உள்ள ஆணவம் என்னும் மறைப்பு உயிர் என்னும் பிடிப்பு உடம்பு என்னும் சுவர் இவைகள் மூன்றும் ஆன்மாவை மறைத்துக் கொண்டு உள்ளன. இவற்றை அகற்ற வேண்டும். அகற்றினால் தான் கடவுள் நிலைக்கு நம்மை மாற்றிக் கொள்ள முடியும். இந்த கதவுகளை திறக்க மாற்ற எது தேவை என்றால், அருள் தேவை. அருள் பெறுவதற்கு என்ன செய்யவேண்டும்? உயிர்கள் மேல் இரக்கம், தயவு என்னும் ஜீவ காருண்யமயமாக மாற வேண்டும். அடுத்து.

கடவுள் ஒருவரே. அவரே "அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்" என்ற உண்மை அறிந்து அவரிடம் இடைவிடாத அன்பு என்னும் காதல் கொள்ள வேண்டும். அன்பும் காதலும் களங்கம் இல்லாமல் இணைய வேண்டும். அந்த பேரானந்த இணைப்பினால் சேர்க்கையால் அருள் சுரக்கும். அந்த அருள் உயிரையும் உடம்பையும் ஒளிமயமாக மாற்றும். ஒளிமயமாக மாறினால் மட்டுமே நம் தந்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் யார் என்பதை அருட் கண்களால் காண முடியும். அந்த உண்மையைக் கண்ட வள்ளலார் "கண்டேன், களித்தேன், களிப்புற்றேன், கலந்து கொண்டேன்" என்கிறார்.

மேலும் திருக்கதவை திறப்பதற்கு அவர் பதிவு செய்துள்ள பாடல்!

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருஉருக்காட் டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தே உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சிஅரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல் பகல் இன்றி என்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே!

மேலே கண்ட பாடலில் இரவு பகல் அறியாமல் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை உணர்ச்சி பொங்க கட்டிப் பிடித்து இணைந்து, அருளைப் பெற்றுள்ளார். இதுதான் சத்விசாரம் என்பதாகும்.

கணவன் மனைவி உறவு கொண்டால் உணர்ச்சி மோகத்தில் சுக்கிலம் வெளியே வருகிறது. அப்போது

**குணமுதல் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (572)**

கிடைக்கும் இன்பம் அபாரமானது. அவை கொஞ்ச நேரம் சுவைக்கலாம். பிறகு மறைந்து விடும். இதற்கு சிற்றின்பம் என்று பெயர்.

அவ்வாறே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் இடம் இணைந்து உணர்ச்சி பொங்க அனுபவித்து கிடைக்கும் இன்பம் அருட் சுகம், அருள் இன்பம்.. ஆன்ம சுகம், ஆன்ம இன்பம் என்று பெயர்... இதற்கு பேரின்பம் என்றும் பெயர். அந்த இன்பம் அந்த சுகம் என்றும் அழியாது. அந்த ஆன்ம இன்ப லாபத்தைப் பெற்றால் தான் மரணத்தை வெல்ல முடியும். பேரின்ப லாபம் என்னும் சுத்த பிரணவ ஞான தேகத்தைப் பெற்று கடவுள் நிலை அறிந்து அம்மயமாகி வாழ்வதுதான் மனித தேகத்தை பெற்ற ஜீவர்களின் வாழ்க்கையாகும்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கும் நமக்கும் உள்ள இடைவெளியை நீக்கி அருள் இன்பம், அருட் சுகம் பெறும் வழியைக் காட்டுவதுதான் வள்ளலார் காட்டிய சுத்த சன்மார்க்கம். சுத்த சன்மார்க்கம் கற்றுத்தரும் கல்வி தான் சாகாக்கல்வி என்பதாகும்.

வள்ளலார் கற்றுத் தந்த சாகாக்கல்வியைக் கற்று, அருட்சுகம் பெற்று, அருள் இன்பம் அடைந்து கடவுள் நிலை அறிந்து அம்மயமாவோம்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா நெறியே குவலயம் எல்லாம் ஓங்குக!

அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

---

**வள்ளலார் அருள் ஜோதி சங்கம்**
குளத்துப்பாளையம், தாராபுரம் – 638861.

**195-வது வள்ளலார் ஜெயந்தி திருவிழா**

**18-ம் ஆண்டு மாநில அளவிலான கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவ-மாணவிகளுக்கான கட்டுரைப்போட்டி**

கீழ்கண்ட தலைப்பில் ஒன்றை தேர்தெடுக்கவும்:

1. வள்ளலார் கண்ட சன்மார்க்க நெறிகள்
2. வள்ளலாரும் – புத்தர், இயேசு, நபிகள் நாயகம் மற்றும் இரமண மகரிஷிகள் ஆகியோர்களுக்குள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை பற்றி குறிப்பிடுக.
3. இந்து மதத்தில் உள்ள மூட நம்பிக்கைகளை அகற்றுவதற்கான வழிமுறைகளைக் கூறுக.
4. ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்.

மேற்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து கட்டுரைகளை எழுதி வரும் 30-11-2017-ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அனைவருக்கும் VIP கையோப்பமிட்ட சான்றிதழ்களும், பரிசுகளும் உண்டு. தங்கள் முழு விலாசம், கைபேசி எண்ணும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.


**கலைமாமணி புலவர். ராசு** (கல்வெட்டு அறிஞர்)
64/3, ஆசிரியர் குடியிருப்பு, T.P. காம்ப்ளக்ஸ், ஈரோடு – 638011.
தொலைபேசி : 0424 – 2262664.

**மனமுதல் கருவிகள் மண்உயிர் வெளியிடை**
**அனமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (574)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் நன்மங்கலம் சத்திய நாராயண முதியோர் இல்லத்திற்கு அன்போடு அன்னம் பாலித்த காட்சி.







**காலமே முதலிய கருவிகள் கலைவெளி**
**ஆலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (576)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் அடையாறு ஆந்திரா மகிளா சபா மனநலம் பாதித்த குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்ட காட்சி.













துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை
அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (578)

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர்
சத்திய தருமச்சாலையில் மாத பூச திருநாளில் தொடர்ந்து 46-வது மாதமாக
அணையா அடுப்பின் உலையில் அயராது உழைக்கும் ஆடுகின்ற சேவடிகள்.**











**இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (580)**

# ஒரு நல்லாட்சி எப்படி இருக்க வேண்டும்?

ஒரு நல்லாட்சி எப்படி இருக்க வேண்டும்...
என்படி நடக்க வேண்டும் என்பது பற்றி
நயத்தகு நற்றமிழில் நங்கூரம் இட்டாற்போல்
வள்ளல் பெருமான் ஒரு வரையறை வேள்வி
செய்கிறார்

ஒவ்வொரு ஆட்சியாளரும் இந்த
வரைமுறை பற்றி ஒருமுறையேனும்
தகுமுறையோடு சிந்தித்தால்
மாபெரும் மாற்றங்கள் மாநிலம் எங்கும் மலரும்.
மக்களாட்சித் தத்துவம் உயரும்.

ஆனால்...

மனம் வைப்பார்களா அதிகார மனிதர்கள் என்பதுதான்
மனத்தைக் கிழிக்கும்
மகத்தான கேள்வியாய் நிற்கிறது!

பெருமான் பகர்கிறார் ஒரு நாட்டில்...
பறிபடுவது...பூவாக இருக்கவேண்டும்..!
(மங்கையர் தாலியாக இருக்கக் கூடாது. அது அறத்தின்
வேலியாகவும் இருக்கக் கூடாது. வரியென்னும்
பெயரில் பல்வேறு வழிகளில் வருத்திப் பறிப்பதும்
ஆகாது.)

சிறைப்படுவது...புனலாக இருக்கவேண்டும்...!
(அணைக்கட்டுச் சிறைக்குள் அடைபட்டுக் கிடப்பது
நீராக இருக்கவேண்டுமே தவிர மனிதர்களாய் இருக்கக்
கூடாது.)

அலைபடுவது காற்றாக இருக்கவேண்டும்...!
(கண்டிப்பாய் அரசின் நெஞ்சாக இருக்கக் கூடாது.)

வடுப் படுவது மாவாக இருக்கவேண்டும்...!
(மாமரத்தில்தான் மாவடு இருக்கவேண்டுமே தவிர,
அரசின் நடவடிக்கைகளில் வடு இருக்கவே கூடாது. வடு
நீங்கு சிறப்பின் வடிவமாய் விளங்க வேண்டும் அரசு.)

குலைப் படுவது வாழையாக இருக்கவேண்டும்!
(வேறு எதுவும் குலைந்து வீணாகக்கூடாது.)

மதுவுண்பது.. வண்டாக இருக்கவேண்டும்...!
(மக்கள் எனும் மண்டாக இருக்கக்கூடாது.)

அடிபடுவது பந்தாக இருக்கவேண்டும்..!
(மக்களாய், மகளிராய், மாணவர்களாய்
இருக்கக்கூடாது.)

கட்டிக் கிடந்து உண்பது பரியாக (குதிரையாக)
இருக்கவேண்டும்...!
(வெட்டியாய்க குந்திக் கிடந்து உண்ணும் மக்களை
உருவாக்கக் கூடாது.)

குத்துப் படுவது நெல்லாக இருக்கவேண்டும்...!
(நெல்லைத்தான் குத்த வேண்டும். நெஞ்சங்களை அல்ல!)

போரில் படுவது நெற்கதிராக இருக்கவேண்டும்...!
(இடுபோர் வேண்டும், அடுபோர் ஆகாது.)

வளை படுவது வயலாக இருக்கவேண்டும்...!
(நண்டுகள் பதுங்கும் வளை இருக்கலாம். மக்கள்
பதுங்கக் கூடாது. தலைவர்களும் ஜாமீன் கேட்டுப்
பதுங்கக்கூடாது..!!?

குறைபடுவது மாதர் இடையாக இருக்க வேண்டும்...!
(ரேஷன் கடைப் பொருளாய் இருக்கக் கூடாது. சட்டத்தின்
ஆட்சியும் குறைபடக் கூடாது.)

தரித்திரமே... தரித்திரப்படுவதாக இருக்கவேண்டும்...!
(ஆட்சியே தரித்திரமாய் அமைந்துவிடக் கூடாது!)

துக்கமே .. துக்கப்படுவதாக இருக்கவேண்டும்...!
(துக்கத்தில் சிக்கித் தூக்கமே இல்லாமல் மக்கள்
வருத்தப்படக் கூடாது.)

பொய்யே... பொய்படுவதாக இருக்கவேண்டும்..!
(அன்றாடம் ஒரு பொய்யை அரசாங்கமே
அவிழ்த்துவிடக்கூடாது!)

இப்படியெல்லாம் அமைந்தால்தான்
அது.. நல்லாட்சியாக இருக்கும் என்பதை

**ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்**
**ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி (582)**

எதிர்மறைக் கோணத்தில் எளிமையாயும்
அருமையாயும் எடுத்தியம்புகிறார் எம்பெருமான்.

மனுமுறை கண்ட வாசகத்தில்
மனுநீதிச் சோழன் ஆட்சி இப்படி இருந்ததாக

எழிலார்ந்த தமிழில் எம்பெருமான் குறிப்பிடுகிறார்!

உண்மையில் இப்படி ஒரு நாடு இருந்தால்
எப்படியிருக்கும் என்னும் செழிப்பான சிந்தனையின்
சிலிர்ப்பு வடிவம்தான் இந்த சித்திரச் செதுக்கல்.

கோசலப் பெருநாடு எவ்வண்ணம் இருந்தது என்பதை
வடித்துக்காட்டும் கவிராஜன் கம்பனின் கற்பனையும்
இவ்வாறுதான் வாசிப்பவர் நெஞ்சத்தில் வர்ணஜாலம்
காட்டும்.

“அங்கே வள்ளல்கள் இல்லை. ஏனென்றால்...
அங்கே வறுமையில்லை, அங்கே வீரமில்லை.
ஏனென்றால் பகைவர்கள் இல்லை.
அங்கே உண்மை என்று குறிப்பிட ஏதுமில்லை.
ஏனென்னறால் அந்நாட்டில் பொய் உரைப்பார்
எவருமில்லை. அதுமட்டுமா?
எல்லோரும் எல்லாமும் பெற்றிருப்பதால் அங்கே
இல்லாருமில்லை. உடையார்களும் இல்லை”
என்று ஆச்சரியக் குறிகளை அள்ளி வீசுவான் கம்பன்.

அவை அத்தனையும் அவன் அவாவில் பூத்த
அம்புலிப்பூக்கள்.

ஆறறிவுப் படைத்த மனிதர்களால் ஆளப்படும் ஒரு
நாடு எவ்வாறு மிளிர வேண்டும் என்பதற்கான
உச்சபட்சக் கனவுதான் இந்த உயிர்ப்பான
வார்த்தைகளில் ஊடுபயிராய் நிற்கிறது.

நம் வள்ளல் பெருமானும் இந்த வழித்தடத்தில் நின்று
வசீகரமாய்ச் சிந்தித்து வரலாறு படைக்கிறார்.

இன்றைய சமூகச் சீரழிவின் சின்னமாய் இருப்பது...
மது. அது பரம்பொருளைப்போல் எல்லாயிடத்திலும்
பரவிக் கிடக்கிறது.

“களியரைக்கண்டு பயந்த என் பயந்தான் கடலினும்
பெரிது கண்டாய்” என்று அந்த வெறியூட்டும்
பானத்தை உண்டாரைக் கண்டு அஞ்சி ஒதுங்கி
வெறுத்துச் சாடும் வள்ளலார்...

ஒரு நாகரிகம் மிகுந்த நாட்டில் மது உண்பது
வண்டுகளாக மட்டுமே இருக்க வேண்டும் என்று
பிரகடனப்படுத்தும் பேரழகு மிக்க சொல்லாட்சி – தமிழ்
இலக்கியத் தடத்தில் எங்கும் காண முடியாத அறிவாட்சி
ஆவணம் என்றால் அது மிகையாகாது.

இதேபோல் மற்ற வார்த்தைச் சுடர்களையும், நான்
அடைப்புக் குறிக்குள் அறிவித்துள்ளவாறு
அகநோக்கில் கண்டு ஆனந்திக்குமாறு அன்பர்களை
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அறிவுச் சிலிர்ப்பூட்டும் அற்புதமான உரைநடையில்
ஆவலூட்டுகிற சிந்தனையை அனைவரும்
வியக்கும்படியான ஆழமான நோக்கில் யாருமே
யோசிக்காத புதிய கோணத்தில் புதிய சொற்களில்
அசத்தலாய் வெளிப்படுத்தும் அருட்பிரகாசரின் மொழி
ஆளுமை எண்ணுதொறும் இனிக்கும் – நம்
இதயத்தில்.

இந்த நூற்றாண்டுக்கும்

ஏற்புடைய புரட்சிகரமான சிந்தனைப் பூந்தோட்டமாய்க்
கமழும்... வள்ளல் பெருமானின் இது போன்ற வாசகத்
தேன் அடைகள் – நம்மையும் நாட்டையும் நலமுற
வாழ்விக்கட்டும்.

வள்ளல் பெருமானின் அறிவுரைக் கருவூலத்தை
அறியார்க்கும் – அடியார்க்கும் திறந்து காட்டும் ஆன்ம
லாப சேவைக்கு தொடர்ந்து நம்மை முற்றிலுமாய்
அர்ப்பணித்துக் கொள்வோம்.

கவிமணி
**கங்கைமணிமாறன்**
கங்காதரபுரம்
+91 9443408824

**சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை**
**அருள் திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (584)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வேளச்சேரியில் நாட்டு நலப்பணித்திட்ட முகாமிற்கு வருகை தந்த மாணவிகளுக்குஒரு வார காலமாக அறுசுவை உணவு வழங்கப்பட்ட காட்சி.**





**காவல்செய் தலைவரை அவர் அண்டங்களை**
**அவகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி (586)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

## 19. போதாந்த வெளி

37. விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளியெனும்
38. அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

(உ–வி.) போதாந்தம் என்பது மெய்யுணர்வின் முடிவு நிலையாம். "போது" என்ற சொல் மலர்ந்து விரிந்த பூவைக் குறிப்பதாம். ஒரு பூவானது மலர்ச்சி பெறாதபோது அரும்பாக இருக்கும்; அப்போது அதனிடத்தே மறைந்து கிடக்கும் நிறமும், மணமும், இன்சுவைத்தேனும் விளங்குவதில்லை. இதுபோலத்தான் ஓர் ஆன்மாவானது பக்குவமுறாத காலையில் அரும்பென அருகிப் புறவண்ணத்தோற்றமும், உயிர் உணர்வும், அறிவானந்த அனுபவமும் பெறாது கிடக்கின்றதாம். இப்படி அரும்பு நிலையிலுள்ள ஆன்மா கட்டவிழாது, தளையுண்டு கிடக்கும் நிலையை மலம் என்கின்றனர். ம் என்ற எழுத்து உச்சரிக்கப்படும்போது உதடுகள் மூடிக்கொள்ளுவதும். ர் என்று ஒலிக்கும்போது இதழ் விரிந்து உட்காற்று வெளிப்படுவதும் அறிவோம். இவ்வுண்மையே மலம் மலர் என்றதன் கருத்துகொண்டு விளங்குவதாம்.

விமலம் என்ற சொல் கடவுணிலையைக் குறிப்பது. எவ்வாறெனில், வி என்பது இன்மைப் பொருளையுணர்த்தலின், கடவுள் இயல்பாகவே மலம் ஒன்றுமில்லாத அனாதிமுத்தசித்துரு உள்ளவர் என்ற கருத்தைச் சுட்டவந்ததாம். மேலும், வி என்ற எழுத்து, வகர அருள் மெய்யும், இகர அருட் பிரணவ உயிரும் கொண்டு அருள் வண்ணமாய்த் திகழ்வது. இதனால் இந்த நிறை அருள் உண்மையோடு மறை யுற்றுக்கிடக்கும் இறைநிலையை விமலநிலையாக விளம்பினது உண்மைக்காரணமேயாம். அப்படியுள்ள விண்வெளி நிறை விமல பதியின் ஒரு சிற்றணுவான ஆன்மா பக்குவமுறும்போது, மலபாசக் கட்டவிழ்ந்து அருள் மணத்தோடு ஆன்மானுபவம் ஏற்படுகின்றதாம். ஆன்மாவுக்கு இதுகாறும் மல மறைப்பு இருந்து நீங்கினதாக அறியப்படுகின்றது. இதனால் ஆன்மா, அசுத்தமாகிய மலத்தோடிருந்து பின்னர் சுத்தமுறுவதால் இது அமலநிலை என்று குறிப்பிடுவர். ஓர் ஆன்மாவுக்கு இம்மல நீக்க அருள் அனுபவம் இம்மனிதப் பிறப்பில் சிற்சபையில் விளங்குவதாம். ஆகவே, விமலம் என்பதற்கும், அமலம் என்பதற்கும் பொருள் : இயற்கையில் மலமேயில்லாத அருட்பெரும்பதி நிலையைக் குறிப்பது விமலமாம். ஆன்மாவுக்கு அபக்குவத்தில் மலம் இருந்து, பக்குவத்தில் அம்மல நீக்கம் பெறப்பட்டு அமலநிலை ஏற்படுவது அனுபவம்.

விமல மெய்ப்பொருளாகிய கடவுளை அடைய, ஆன்மாவுக்கு அமல நிலையுண்டாக வேண்டுமாம். ஆனால் இவ் அமல நிலை, சிற்சபையின் கண்ணின்று அருட் பெருஞ்ஜோதி மயமானாலன்றி வேறு வழியில் பாசநீக்க, போதநாசமும், இறையனுபவ வாழ்வுமுண்டாகா. முன் சுத்த நெறியின்மையால் விமல நிலை அடைய முனைந்த மனிதன், அமல நிலை பெறற்கு தேகாதியையே துறக்க வேண்டுமெனக் கொண்டது தவறாம். அருட்பெருஞ்ஜோதிச் சிற்சபையில் இருந்து வாழ முனைவது தான் விமலமூர்த்தியோடு கலவாதே ஒன்றி அதுவாகி வாழும் முறை என்பது இன்றைய அனுபவமாம். உண்மையில் உள்ளது அருட்பெருஞ்ஜோதி ஒன்றே. அந்த அருளே பெருஞ் ஜோதியைப் பசுபாசமாய், தேகாதியாவமாய் ஆக்கிக் கொண்டிருப்பதுதான் உண்மை. இவ்வருள் உண்மைக் காரியப்பாட்டையுணராத மனிதன்தான் அவ்வருளை, இருள் மாயா மலமாக நினைத்து ஒழிக்க முயன்று, தேகாதியை இழந்து ஒழிந்தே போகின்றான். நிறை அருள் கொண்டு அமல சிற்சபையிலிருந்து அருட் பெருஞ்ஜோதியைப் போற்றி வாழ்வு பெறுகின்றவனே, போதாந்த நிலைக்கு மேல் விளங்கும் விமலானந்த வாழ்வு கொண்டு நிலவுவான் என்பது உண்மையாம்.

**அழித்தல்செய் தலைவரை மற்றும் அண்டங்களை**
**அழுக்கற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (588)**

# நித்ய தீப தருமச்சாலை

## கடந்த 10 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 19 தருமச்சாலைகள் மூலம்

# அன்னம் பாலிப்பு




நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை- 600 042.

**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 19 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.19, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,90,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

## DEEPAM TRUST

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

**மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை**
**அறத்தொடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி (590)**

## தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகள்

1. தினசரி காலை 19 தருமச்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்குக் கஞ்சி வார்த்தல் நடைபெற்று வருகிறது.
2. தினசரி மதியம் நித்ய தீப தருமச்சாலை மற்றும் நடமாடும் தருமச்சாலை மூலம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் நடைபெற்று வருகிறது.
3. மாதந்தோறும் வறுமையால் வாடும் பார்வையற்ற குடும்பங்களுக்கு அரிசி, மற்றும் மளிகைப் பொருட்கள் ஆயுட்கால வாழ்வாதார உதவியாக கடந்த ஆறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.
4. மாதந்தோறும் சைதாப்பேட்டை சன்மார்க்க சங்கம், வேளச்சேரி தண்டீஸ்வரம் ஆலயம் உள்பட மதியம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு அறுசுவை உணவுடன் பசியாற்றுதல் நடைபெற்று வருகிறது.
5. மாதந்தோறும் நோயினால் வருந்தி, வறுமையால் வாடும் டயாலிஸிஸ் சிகிச்சைக்காக ஆயுட்கால உதவியாக பலருக்கு கடந்த ஐந்தாண்டுகளாக மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.
6. ஆண்டுதோறும் வறுமையால் வாடும் கிராமப்புற மாணவர்களின் (நன்றாக தேர்ச்சி பெற்ற) எதிர்கால வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படிப்புக்காக பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி உதவி வழங்கப்பட்டு வருகிறது.
7. மாதந்தோறும் வடலூர் சத்திய தர்மச்சாலையில் பூச நன்னாளில் 47 மாதங்களாக தீபத்தின் தன்னார்வத் தொண்டர்களும், சேவடிகளும் பங்கு பெற்று சமையல் மற்றும் பசியறாற்றுவிக்கும் சேவையும் செய்து வருகிறார்கள்.
8. மாதந்தோறும் பூச நன்னாளில் வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இரவு 8.00 மணியளவில் ஆறு திரை நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது.
9. வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் பொருட்டு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு 173 வாரங்களாக நடைபெறுகிறது.
10. விரைவில் மேலும் 12 தருமச்சாலைகள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் விரிவாக்கம் செய்ய எண்ணியுள்ளது.

---

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம். இதழுக்கு வருட சந்தா அனுப்ப விழைபவர்கள் நன்கொடையாக அனுப்பலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

## தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற / நிறுத்த
முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு
**முகவரியை** SMS / WhatsApp செய்யவும்.

**தெளிவுசெய் தலைவரைத் திகழும் அண்டங்களை**
**அளிபெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (592)**

# தேவ தேவா! மஹா தேவா!!

“இவர்க்கும் எனக்கும் பெருவழக்கிருக்கின்றது. அது என்றும் தீரா வழக்கு காணடி....” என்று துவங்கி ஒரு அருமையான பாடலை வழங்கியுள்ளார் வள்ளலார். உங்களில் பலர் அப்பாடலை படித்தும், அனுபவித்தும் அதன் உண்மைகளை நுகர்ந்தும் இருக்கலாம்.

இவரிடம் எனக்கும் வழக்கு உள்ளது.

வள்ளலார் தீரா வழக்கென்றார். பெருவழக்கென்றார். ஆனால் எளியேனின் வழக்கு அவசர வழக்கு. தீர்க்கப்பட வேண்டிய வழக்கு. தீர்ப்பு வேண்டாம். தீர்வுதான் வேண்டும்.

எந்தையே! எந்தையே!! உம்மாலே உருவாக்கப்பட்ட வழக்கு. உம்மால் மட்டுமே தீர்க்கப்பட வேண்டிய வழக்கு.

வழக்காடும் என்னையும் அறிவீர். வழக்கு விவரங்களையும் முழுமையாக அறிந்தவர் நீர். பிறகு வழக்கு எதற்கு?

வழக்கை சமர்ப்பிக்கிறேன். வழக்கின் விவரங்களை நீங்கள் அறிந்திட வேண்டாமா? என்னோடு இணைந்து நீங்களும் அவரிடம் வழக்காடலாமல்லவா? விண்ணப்பிக்கலாம் அல்லவா? மிக அவசரம் என்று உணர்கிறவர்கள் மன்றாடலாம்.

என் வழக்கு :

மனிதனைப் படைத்தாய்; எண்ணும் ஆற்றலை அருளினாய்; உணர்வுகளை வழங்கினாய்; ஒலிகளை எழுப்பி உணர்வுகளை வெளிப்படுத்திய நிலையினின்று மொழிகளால் மனிதரை இணைய வைத்தாய்.

இலக்கியங்களைப் படைத்தாய்; படைப்பித்தாய்; உலகியல் நூல்களை இயற்றினாய்; இயற்றுவித்தாய்; படிப்பித்தாய்.

மனிதனின் துவக்க நிலையினின்று, படிப்படியாக மனிதனை மாமனிதனாக்கி, உன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்ள நினைத்தாயோ? அன்றி, மனிதனை பேராற்றல் மிக்க பெருஞ்சக்திமானாக்க விரும்பினாயோ? பிரபஞ்ச இரகசியங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளும் வல்லமை கொண்ட நுண்ணறிவாளனாக உயர்த்திட திட்டமிட்டாயோ?

ஒரு சிலர் கூட உனது இலக்கை அடையவில்லையே. ஏன்?

எல்லாம் கொடுத்துவிட்டேன். நல்வழியை நீ தேர்வு செய்திடும் திறனையும் அளித்தேன். அமிர்தத்தையே வழங்கினாலும் விஷத்தை தேர்ந்தெடுப்பதிலேயே விருப்பமுள்ளவனாக நீ இருப்பதால் கெட்டுத் திருந்தட்டும் என ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறாயா?

ஆயிரம் நாமங்களால் உன்னை அர்ச்சித்து மகிழ்கிறோம். பல நூறு வடிவங்களில் சிற்பங்களாக – சிலா ரூபங்களாக – கண்கவர் ஓவியங்களாக பல நூற்றாண்டுகளாக உன்னைப் பக்திப்பெருக்கோடு வழிபட்டு வருகிறோமே!

கண்டாரும் விண்டதில்லை. விண்டாரும் கண்டதில்லை என ஒரு கூற்று உண்டு.

உம்மை சிலை வடிவாக்கிய முதல் சிற்பிக்கு மட்டும் காட்சி அளித்தீரோ? இன்று வரை நாங்கள் உம்மை வணங்குவதெல்லாம் எங்கள் சிற்பிகளின் – ஓவியர்களின் கற்பனையும் கைத்திறனாமே. அத்தகு கற்பனையையும் கற்பித்தவன் நீதானோ?

உன்னை எங்கள் ஆன்றோர்கள் எண்ணற்ற பாசுரங்களிலும் பதிகங்கள் மூலமும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

சிலவற்றை சமர்ப்பிக்கிறேன் :

பொன்னார் மேனியனே – தோடுடைய செவியனே – பச்சை மாமலை போல் மேனி, பவள வாய், கமலச் செங்கண், பாற்கடலில்

**விந்துவாம் சத்தியை விந்தின் அண்டங்களை**
**அந்திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (594)**

பள்ளிகொண்டவனே! கயிலையம்பதியில் ஆட்சி புரிபவனே என்றெல்லாம் பக்திப் பெருக்கோடு பாடி மகிழ்ந்தார்கள். மகிழ்கிறோம்.

எங்கள் வள்ளலாரும் உம்மை அடையாளங் காட்டினார்.

சுழியாத அருட்கருணைப் பெருக்கே என்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதியே வான்
ஒழியாது கதிர்பரப்புஞ்சுடரே அன்பர்க்(கு)
ஓவாத இன்பறாடும் ஒன்றே விண்ணோர்
விழியாலும் மொழியாலும் மனத்தினாலும்
விழைத்தருமெய்த் தவத்தாலும் விளம்பும்எந்த
வழியாலும் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மவுனவெளியூடிருந்து வயங்கும் தேவே!

**தேவே! தேவ தேவே!!**

நூற்றாண்டுகள் பல கழிந்தும் மனிதன் அடுத்த நிலைக்கு உயரவே இல்லையே! தரம் தாழ்கிறதே தவிர, அறிவு, ஆற்றல், துணிவு, அன்பு கூடியதாகத் தெரியவே இல்லை.

அறன் இழுக்கான அழுக்காறு, வெகுளி, அதீத அவா, இன்னாச்சொல் இவைகள் குறைந்ததாகக் கூடத் தெரியவில்லை.

ஆலயங்கள் – சக்தி நிலையங்கள்.

தளர்ச்சியுறும் மனிதன் தேவாதி தேவனிடம் சென்று வழிபட்டு தனக்குத் தேவையான, துணிவை, ஆற்றலை – அறிவைப் பெற்றுக் கொள்ளத்தான் ஆலயங்கள், அகத்தூய்மைக்காகத்தான் ஆலயங்கள்.

ஆனால் நடைமுறையோ விபரீதமாகவல்லவா இருக்கிறது. சடங்குகளை விமரிசைப்படுத்துவதில் காண்பிக்கும் தீவிரம், உள்ளங்களில் படிந்துள்ள மாசு நீக்குவதில் சிரத்தை இல்லையே ஏன்?

உலகில் 80 சதவிகிதத்தினர் அருவமாகவே உன்னை வழிபடுகிறார்கள். உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள ஆதிவாசிகள் தங்கள் உணர்வுகளாலேயே உன்னை வழிபட்டுக் கொண்டுள்ளனர். அவர்கட்கும் அருள் பாலித்துக் கொண்டு தானே இருக்கின்றீர். உமது அரவணைப்பில் தானே அவர்களும் இயங்கிக் கொண்டுள்ளனர்!

வேள்விகள், யாகங்கள், ஹோமங்கள், அன்றாட அபிஷேகங்கள், ஆறுகால பூஜைகள், ஐந்து வேளைத் தொழுகைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் – தவம் – தியானம் என இன்னபிற நியதிகள் கடைப்பிடிக்கப்பட்டும், புனித நீராடல், புனித ஸ்தல யாத்திரை, இலட்சார்ச்சனை, திருவீதி உலா, தேரோட்டம், தீமிதி, தன்னை வருத்திக் கொண்டு நேர்த்திக் கடன்கள் மிகுந்த சிரத்தையோடு நிறைவேற்றப்பட்டும் மக்களிடையே, இணக்கம்– அன்பு – நட்பு – மனிதநேயம் மலரவில்லையே ஏன்?

நல்லவனாக வேண்டும் என்று நீங்கள் கேட்கவில்லையே என்று நீர் கன்னத்தில் அறையக் கூடும். எங்கள் தவறுதான்,

எந்தையே! பிழைபொறுத்தல் நினது கடன்.
படமாடும் பரமனுக்கு ஒன்று ஈயில்
நடமாடும் நம்பர்க்கங்கு ஆகா

என்று திருமூலரை எழுதச் சொன்ன நீ, நித்ய அபிஷேகங்களையும், கண்கவர் அலங்காரங்களையும் அவசியமற்றது என உணர்த்தக் கூடாதா???

தனது நன்றியறிதலை, தனது பக்தியை, தனது அர்ப்பணிப்பை பக்தன் தெரிவிக்கவே அபிஷேகமும், அலங்காரங்களும், திருவீதி உலாக்களும், விமரிசைகளும் என வாதிடுவோர் நம்மில் பலர்.

ஆனால், ஆலயங்கள் எதற்காக நிர்மாணிக்கப்பட்டனவோ, அந்தப் பயனை மாந்தர் முழுமையாக நிறைவேற்றிக் கொண்டனரா என்பது ஆய்வுக்குரிய விஷயம்.

இன்னும் வரும்...

தொடரும்...

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை**
**ஆங்கார அமைத்த அருட்பெருஞ்ஜோதி (596)**

**சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சன்மார்க்க மாநாட்டிற்கு வருகை தந்த அன்பர்களுக்கு வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் அறுசுவை உணவு தயாரித்து வழங்கப்பட்ட காட்சி.**


காலை உணவு வழங்குவதற்கு தயாராகும் காட்சி


ருசித்து சாப்பிடும் பள்ளி மாணவ-மாணவியர்கள்


மதிய உணவில் திரண்ட கூட்டம்


ஓயாது உழைக்கும் தீபத்தின் ஆடுகின்ற சேவடிகள்


சேலம் குப்புசாமி அய்யா தம்பதியினர்


தென்ஆப்ரிக்கா பென்நாயக் தம்பதியினர்


மலேசியா ஆத்மநாபன் அவர்கள்


இரவு உணவு வழங்கப்பட்ட காட்சி

RNI : TNTAM / 2010 / 35284 "REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT R.No.TN/CC(S)Dn/412/17-19
UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தருமச்சாலை திறப்பு விழாவில் சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் அறுசுவை உணவு வழங்கப்பட்டபோது எடுத்த காட்சி.

நாள் : 01.10.2017



தீபம் அறக்கட்டளையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தருமச் சாலைக்கு தினசரி அன்னக்கஞ்சி வார்க்க பாத்திரம் மற்றும் அடுப்புகளை தருமச்சாலை பொறுப்பாளர் பிரம்மஸ்ரீ பழனிச்சாமி அய்யாவிடம் வழங்கப்பட்ட காட்சி.

If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.in
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-10-2017
Egmore, Chennai - 8